# கேள்வித்தொகை மாற்றம் - கேள்விமாற்றம் வேறுபடுத்துவர்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

தேர்ச்சி மட்டம் - 2.2

## கேள்வித்தொகை மாற்றம் - கேள்விமாற்றம் வேறுபடுத்துவர்

| கேள்வித் தொகை மாற்றம் | கேள்வி மாற்றம் |
|---|---|
| • குறித்த சந்தப்பத்தில் பொருளின் விலை மாற்றத்தினால் கேள்வித்தொகையில் ஏற்படும் மாற்றம். | • குறித்த சந்தர்ப்பத்தில் பொருளின் விலை மாறாது இருக்க ஏனைய காரணிகளில் ஒன்றின் மாற்றம் காரணமாக கேள்வியில் ஏற்படும் மாற்றம். |
| • கேள்விக் கோட்டின் வழியான அசைவாக காணப்படும். | • கேள்விக் கோட்டின் அசைவாக காணப்படும் |
| • கேள்வி நீட்டம், கேள்வி ஒடுக்கம் என்ற இரு பிரிவுகள் காணப்படும். | • கேள்வி அதிகரிப்பு, கேள்வி குறைதல் எள்ற பிரிவுகள் காணப்படும். |

இவ் வேறுபாடுகளை வரைபில் காட்டுவதாயின்






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பொருள் ஒன்றின் கேள்விக்கோடு வலப்புறம் நோக்கி நகர்வடைதற்கு காரணங்கள் (கேள்வி அதிகரிப்பு)

- நுகர்வோர் வருமான அதிகரிப்பு
- நுகர்வோர் சுவை சாதகமாதல்
- நுகர்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு
- பதிலீட்டுப் பண்டங்களின் விலை உயர்வு

அதாவது விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் சாதகமாக மாறும் போது இம்மாற்றம் இடம்பெறும். இது கேள்வி மாற்றத்தின் ஒரு விளைவு ஆகும்.

இதே போன்று கேள்வி குறைதலை அமைத்துக்கொள்ள முடியும்.

### குறிப்பு

பரீட்சையில் குறிப்பிட்ட பொருள் ஒன்று குறிப்பிட்டு தரப்படின் அப்பொருள் சார்ந்த விடை குறிப்பிடப்பட வேண்டும்.



உதாரணம்

தேயிலையின் கேள்வி அதிகரிப்பதற்கு காரணங்கள்

1. தேயிலையை நுகர்வோரின் வருமான உயர்வு
2. தேயிலையின் பிரதியீட்டு உற்பத்திகளின் விலை உயர்வு
3. தேயிலை நுகர்வோரின் தொகை அதிகரிப்பு
4. தோயிலையின் சுவை சாதகமாதல்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk